முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருநீலகண்ட நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

21.12.2018, வெள்ளிக்கிழமை

1. **மும்மலக்குற்றம் நீக்கும் அரங்கா**
**மும்மூர்த்திகளின் அருளாய் வந்த**
**இம்மை காக்கும் ஆறுமுக அவதார**
**ஏழாம் படை வீட்டு ஞானியே**

2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
இனிமைபட ஒளி சூட்சும நூலை
இயம்பிடுவேன் **திருநீலகண்ட நாயனார்** யானும்

3. **யானும் விளம்பி சிலை திங்கள்**
**உயர்வுபட சஷ்டி திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 6ம் நாள் 21.12.2018, வெள்ளிக்கிழமை)**
**ஞானம் பெற மக்களுக்கு உரைப்பேன்**
**நம்பகம் கொண்டு ஆன்மீக வழியை**

4. வழியை அகத்தியர் சன்மார்க்க
வள்ளலாரின் அருட்சுடர் நெறி
அழியாமை தரும் வழிமுறையை
ஆறுமுக அரங்கமகான் அருளிவர

5. வருகவே உலக மக்களெல்லாம்
வணங்கி ஏற்பதுடன் பின்பற்றி
முருகா முருகா எனும் செபதபமுடன்
முழுமைபட சரணடைவு கொள்ள வேண்டும்

6. வேண்டி வருக வரம் கிட்டும்
வினைகளெல்லாம் விலகி ஓடும்
தொண்டுகள் மூலம் இணைந்து
தொண்டர்களாகித் தொடரவே

7. தொடரவே மக்களிடை நற்குணம்
தெளிவு திடம் உருவாவதுடன்
இடரை வெல்லும் ஆற்றலும்
எங்கும் எக்காலமும் துணை வரும்

8. வருகின்ற ஆறுமுகனார் ஆசியும்
வரமும் கிட்டி சிறப்பர்
தருமம் தொடர்ந்து செய்பவரும்
தருமவானென உலகில் வாழ்பவரும்

9. அவரவரும் ஆறுமுகன் அருளுடன்
ஆயுள் கீர்த்தி பாதுகாப்புமிக்க
புவனமதின் வாழ்வில் அமைதியும்
பொருள் வளமுடன் புண்ணிய பலமும்

10. பலமும் பெருகி சிறப்பர்
பண்புள்ள சமூகமாக உலகமே
வலம் வரும் முருகன் ஆளுமைபட
வையகம் ஞானயுகம் ஆகும்

11. ஆகவே அரங்கன் நெறி
ஆபத்தை வெல்லும் ஞானநெறி
யுகமெங்கும் பரவவே ஞானயுகமாகும்
உரைத்திட்ட ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருநீலகண்ட நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

மக்களிடம் உள்ள மும்மலக் குற்றங்களை நீக்கி அவர்களுக்கு அருள் செய்து காப்பாற்றும் வல்லமைமிக்க மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, சிவனின் அருள் வடிவமாக ஒன்றிணைந்து வந்திட்ட அவதார ஞானியே மறுபிறப்பை ஒழித்து இப்பிறப்பை காத்து கடைத்தேற்றும் வல்லமைமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஏழாம் படை வீட்டு ஞானியே ஆறுமுக அரங்கனே அற்புதமான உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதி உலக மக்களெல்லாம் ஞானம் பெற்று கடைத்தேறிடவே **விளம்பி வருடம் மார்கழி மாதம் 6ம் நாள் 21.12.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருநீலகண்ட நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருநீலகண்ட நாயனார்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மீது அளவிலா நம்பிக்கை கொண்டுமே அரங்கன் அமைத்திட்ட ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் மூலம் உலகோர்க்கு அரங்கன் அருளி வருகின்றதும் வள்ளல்பெருமான் வகுத்திட்ட தூயநெறியாம் வள்ளலாரின் அருட்சுடர் நெறியாகிய ஜோதி வழிபாட்டினை அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வை தருகின்ற ஜோதி வழிபாட்டினை உலகோர்க்கு அருளி வருகின்றதை உலக மக்கள் எல்லாம் பயபக்தியுடன் பணிந்து ஏற்று அரங்கன் கூறும் வழிதனிலே பின்பற்றி வருவதுடன் ஜோதி சுடரினை ஏற்றி வைத்து முருகா, முருகா, முருகா என மனம் உருகி ஜெபதபம் செய்து வருவதுடன் ஜோதி சுடர்முன் வீழ்ந்து வணங்கி முருகா, முருகா, முருகா எமது உள்ளம், உடல், பொருள், ஆவி அனைத்தும் உமது திருவடிக்கே அர்ப்பணிக்கின்றேன். உமது திருவடியைப் பற்றி அடியேன் ஜென்மத்தைக் கடைத்தேற்றிட அடியேனுக்கு தாமே எமக்கு அருள் செய்து எம்மை காப்பாய் முருகா! எமது சரணாகதியை ஏற்றுக் கொண்டு எமக்கு அருள் செய்யுமாறு உங்கள் திருவடி பணிந்து வேண்டுகிறேன் என பயபக்தியுடன் உருக்கமாக வேண்டுகோள் வைத்து முழுச் சரணாகதி கொண்டு வேண்டுகோள் வைத்திட அவரவரும் வேண்டும் வரத்தினை பெற்றிடலாம். அன்பர்களின் வேண்டுகோளிற்கு ஆறுமுகப்பெருமானும் மனம் இறங்கி அருள் செய்வார்.

உளமார சரணாகதி அடைந்து வேண்டுகோள் வைத்திட்ட அன்பர்களின் வினைகள் எல்லாம் முருகப்பெருமானின் திருவருளால் விலகி ஓடிடும். மேலும் அன்பரெல்லாம் அரங்கன் ஆற்றும்

தானதருமப் பணிகளிலே உலகின் தர்மபலத்தை பெருக்கும் விதமாகவும் தாம் செய்த பாவவினைகள் விலகிடுவதற்கும் தொண்டுகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் பூஜைகளை தொடர்ந்து செய்திட செய்திட பூஜை செய்யும் அன்பரின் வினைகள் நீங்குவதோடு உலக மக்களிடையே நற்குணங்கள் பெருகிடும். உலக மக்களுக்கும் மனத்தெளிவும் மனோதிடமும் உண்டாகும். வினைகளால் தமக்கு வந்திட்ட துன்பங்களை வெல்லும் ஆற்றலைப் பெறுவார்கள். எங்கும் எக்காலத்தும் முருகப்பெருமானின் ஆற்றல் துணையாய் வந்திடும். முருகப்பெருமானின் ஆசியும் வரமும் பெற்று சிறப்பான வாழ்வினை வாழ்ந்திடுங்கள்.

**தருமங்களை தொடர்ந்து செய்து தருமவானாக உலகினில் வாழ்பவர்களே, தருமவானாகிய தர்மத்தின் தலைவன் ஆறுமுக அரங்கனின் அடிபணிந்து வாழ்பவர்களே முருகப்பெருமானின் அருளுடன் நீடிய ஆயுளைப் பெற்று அருள் பாதுகாப்புமிக்க வாழ்வை உலகியல் வாழ்வினை அமைதியுடனும் வாழ்வதற்கு தேவையான பொருளாதார வளத்துடன், புண்ணிய பலமும் பெருகி சிறப்பான வாழ்வினை வாழ்வார்கள்.**

இவ்விதமே மக்கள் முருகப்பெருமானை வணங்கி ஆசி பெற்று வரவர, தர்மங்களை செய்து வரவர, உலகம் முழுதும் பண்புள்ள சமூகமாக மாறிடும். உலகம் முழுதும் முருகப்பெருமானின் ஞானஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு உலகினில் முருகப்பெருமானின் ஞானஆட்சி நடந்து இந்த உலகமே ஞானயுகமாக ஆகிடும்.

ஆதலினால் “**அரங்கமகா தேசிகனார் வகுத்திட்ட அரங்க நெறியே ஆபத்தை வெல்லும் நெறியாகும். அதுவே உண்மை ஞானநெறியாகும்.**”

உலகமெங்கும் அரங்கனின் ஞானநெறி பரவிட பரவிட உலகமே ஞானயுகமாக உறுதியாக மாறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் திருநீலகண்ட நாயனார்.

–சுபம்–